**கவனிக்க**.- 27.09.2024 ஆந் திகதிய 2404 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2405 - 2024 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2024.10.04
2405 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 982 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 11 ஆந்திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



981 - B82616 - 5,403(2024/10)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## மத்திய மாகாண போக்குவரத்துத் திணைக்களம்

*தகுதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக தகுதிவாய்ந்த வாகனத் திருத்தகங்களை (கராஜ்) பதிவு செய்தல் - 2025*

மத்திய மாகாணத்தில் பதிவு செய்துள்ள வர்த்தக வாகனங்களுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான தகுதிச் சான்றிதழ் வழங்குவதன் பொருட்டு, வியாபாரமொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் குறித்த வரி செலுத்தப்படுகின்றது என்பதற்கான சாட்சிகள் சமர்பிக்க முடியுமான வாகனத் திருத்தகங்களின் உரிமையாளர்களிடமிருந்து மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கீழுள்ள டிப்போக்களிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மத்திய மாகாணத்தினுள் அமைந்துள்ள வாகன திருத்தகங்களிடமிருந்து (கராஜ்) மாத்திரமே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. வசதிகள்:

I.1. 20 அடி நீளம், 2 1/2 அடி அகலம் மற்றும் 4 1/2 அடி ஆழமான வாகனம் சோதனையிடும் கிடங்கு அல்லது அதற்கு சமமான வசதிகளைக் கொண்ட சோதனையிடும் மேடை அல்லது தூக்குக் கருவி (lift)

I.2. தடுப்புச் சோதனையிடும் உபகரணம்

I.3. பிரதான விளக்கினை சோதனையிடும் உபகரணம்

I.4. வாகனத்தின் கீழ் பகுதி, சக்கரத் திருப்பி, உந்துகல இயக்காழி, தடுப்புக் கருவி (பிரேக்), கம்பி வடங்கள் (கேபிள்) மற்றும் சிதைந்த பாகங்கள் என்பவற்றை சோதனையிடுவதற்காக பயன்படுத்தப்படும் திருப்புளி (ஸ்குரு), திருகிமுடுக்கும் கருவி (ஸ்பேனர்கள்), சுத்தியல் போன்ற இயந்திரக் கருவிகள்.

II. சேவைக் குழாம் :

சான்றுபடுத்தும் அலுவலர்களாக பின்வரும் தகுதிகளைக் கொண்ட நபர்கள் வாகனத் திருத்தகங்களில் பணியில் அமர்த்தி இருத்தல் வேண்டும்.

II.1. மோட்டார் வாகன பொறியியல் விஞ்ஞானம் தொடர்பில் விசேட நிபுணத்துவம் பெற்றவர் அல்லது இயந்திர பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் அல்லது கனிஷ்ட தொழில்நுட்வியலாளர் சான்றிதழ் பெற்று மோட்டார் வாகன பொறியியில் துறையில் 05 வருட அனுபவம் கொண்டவர்.

II.2. மொரட்டுவ இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் மோட்டார் வாகன இயக்கவியல் தொடர்பான நான்கு வருட கற்கை நெறினையினைப் பூர்த்தி செய்து அதில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமனான வேறு தகைமையுடன் மோட்டார் வாகனப் பொறியியல் துறையில் 08 வருட அனுபவம் கொண்டவர்.

02. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்பித்தல் வேண்டும் :

2.1. சான்றுபடுத்தும் அலுவலரின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள்

2.2. மீள் செலுத்தப்படாத வைப்புத் தொகையான ரூபா 2000.00 இனை "இலங்கை வங்கி, இல. 33965, போக்குவரத்து ஆணையாளர், மத்திய மாகாணம் " என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து பெறப்படும் வங்கிப் பற்றுச்சீட்டு

2.3. பரிசோதனை அதிகாரிக்கு அணுகக்கூடிய வகையில் குறித்த வாகன திருத்தகம் அமைந்துள்ள அமைவிடத்தினை சரியான குறிப்பிட்டு, நகரின் மையத்திலிருந்து அவ்விடத்தினை அணுகுவதற்கான பாதை வரைப்படம் (பாதையின் விபரம் சுருக்கமாக குறிப்பிடவும்)

03. வாகன வருவாய் உரிமம் வழங்குவது தொடர்பிலான **eRL 2.0** நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாகன வருவாய் உரிமம் வழங்குகையில் பயன்பாட்டு மென்பொருளினூடாக நடாத்தப்பட்ட சோதனைகளின் விபரங்கள் மற்றும் புகைப்படங்கள் பதிவேற்றம் செய்யப்படவுள்ளதால் திறன் தொலைபேசி (Smarts Phone) ஒன்று தேவைப்படுகின்றது. ஆகையால் 2025 ஆம் ஆண்டில் தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்காக வாகனத் திருத்தகங்களைப் பதிவு செய்கையில் திறன் தொலைபேசி (Smart Phone) வைத்திருப்பது கட்டாய அம்சமாக கருதப்படுகின்றது.

- உரிய விண்ணப்பப்படிவத்தினை அலுவலக வேலை நாட்களில் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " தகுதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக வாகனத் திருத்தகங்களைப் பதிவுசெய்தல் - 2025" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு போக்குவரத்து ஆணையாளர், போக்குவரத்துத் திணைக்களம், இலக்கம் 104, யடிநுவர வீதி, கண்டி என்ற முகவரிக்கு 2024 ஒற்றோபர் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட மாட்டாது.

ஐ.எஸ்.ரத்நாயக்க,
போக்குவரத்து ஆணையாளர்,
போக்குவரத்துத் திணைக்களம்,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண போக்குவரத்துத் திணைக்களம்,
இல. 104, யடிநுவர வீதி,
கண்டி.
2024.09.04

10-27

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

### அட்டவணை - 2024

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2024 |
| | | வெள்ளி | 11.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2024 |
| | | வெள்ளி | 18.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2024 |
| | | வெள்ளி | 25.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2024 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2024 |
| | | வெள்ளி | 08.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2024 |
| | | வியாழன் | 14.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2024 |
| | | வெள்ளி | 22.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2024 |
| | | வெள்ளி | 29.11.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.11.2024 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2024 |
| | | வெள்ளி | 13.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2024 |
| | | வெள்ளி | 20.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2024 |
| | | வெள்ளி | 27.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2024 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.